# யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் விழிப்புலனற்றோர் பிரிவு : ஒரு பார்வை

சி.அனுசியா[1*], வி.பிரபாகர்[2]

**அறிமுகம்**

உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிபர தரவுகளின்படி, உலகளவில் சுமார் 39 மில்லியன் பேர் பார்வையற்றவர்களாக காணப்படுகின்றனர். அவர்களில் 82%மானோர் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைப் பருவத்திலோ அல்லது அதன் பின்னரான வளரிளமைப் பருவத்திலோ சுவாச மற்றும் கண் தொற்று நோய்கள் அல்லது தவறான மருத்துவ சிகிச்சை போன்ற காரணங்களால் பார்வையை இழந்தவர்களாவர். இதனால், இவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மட்டுப் படுத்தப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. முன்னைய காலத்தில், பார்வையற்றவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும், தொழில் புரிவதும் மிகப்பெரும் சவாலாக காணப்பட்டது. எனினும், நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சமூக மாற்றங்கள், பார்வையற்றவர்களின் வாழ்க்கையில் புதிய வழிகளைக் காட்டியுள்ளன. இதன் ஒரு அங்கமாக, யாழ் மாநகர சபையும், யாழ் விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து, யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் பார்வையற்றோருக்கான பிரிவொன்றை 27.05.2015 அன்று திறந்து வைத்தனர். இப்பிரிவு, பார்வையற்றவர்களுக்கு கல்வி மற்றும் தகவல் அணுகல் வாய்ப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கான சமூகமயமாக்கல் செயற்பாடுகளிலும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்திலுள்ள பார்வையற்றோருக்கான விழிப்புலனற்றோர் பிரிவானது யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் அநுசரணையில் உருவாக்கப்பட்டதாகும். யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் சார்பில், இப்பிரிவிற்கு ஒரு கணினி தொகுதி, CD Player, Cassette Player, ABACUS போன்ற உபகரணங்கள் 2015இல் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், பார்வையற்றோருக்கான பிரெயில் நூல்களும் (தமிழில் 10 நூல்களும், ஆங்கிலத்தில் 30 நூல்களும்) யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன. இந்த உபகரணங்களும் தகவல் வளங்களும் பார்வையற்றவர்களின் கற்றல் மற்றும் தகவல் தேடல் செயற்பாடுகளுக்கு பெரிதும் துணைபுரிகின்றன.

இவை தவிர, இணையம், NVDA மென்பொருள், NHM Writer போன்ற நவீன தொழில்நுட்ப வசதி களும் இந்தப் பிரிவில் காணப்படுகின்றன. இவை பார்வையற்றோரின் தகவல் தேடலை எளிதாக்குகின்றன.

யாழ்ப்பாண பொதுசன நூலக விழிப்புலனற்றோர் பிரிவில் பார்வையற்றவர்களுக்கு பிரெயில் எழுத் துக்களையும், கணினி செயற்பாடுகளையும் கற்பிப்பதற்காக திரு. க.சிவகுமார் என்ற உத்தியோகத்தர் 2016இல் பணிக்கு அமர்த்தப்பட்டார். இவரும் விழிப்புலன் இழந்தவர் ஆவார். இவர் வழங்கும் பயிற்சிகள் மூலம், பார்வையற்றோர் தகவல் தொழில்நுட்பத்தில் தமது திறமைகளை வளர்த்துக்கொண்டு, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு

[1*] *Corresponding author*: சி.அனுசியா, யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம், இலங்கை. Email: akskavi12@gmail.com

[2] நூலகம், சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி, இலங்கை.

மாதமும், 30 முதல் 40 வரையிலான பார்வையற்றோர் இப்பிரிவின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தருகின்றனர். இந்த பிரிவு தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுவதற்கான அடிப்படையாக இது அமைவதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்ளைச் சேர்ந்த பார்வையற்றோருக்கான இலகுவான அணுகலைக்கொண்ட பொதுவான மையமாகவும் காணப்படுகிறது.

**அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் இப்பிரிவானது ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பெருமளவான பார்வையற்றவர்கள் வருகை தந்து தன்னம்பிக்கையுடன் இந்த சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லைக்குள் மட்டுமல்லாது, வவுனியா, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களிலிருந்தும் பலர் இங்கு வருகை தந்து சேவைகளைப் பெறுகின்றனர். பல பார்வையற்றோர் இப்பிரிவின் வசதிகளைப் பயன்படுத்தி, உயர்கல்வியை முடித்து, சிறந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்காலத்தில், இப்பிரிவின் தொழில்நுட்ப வசதிகளை் மேம்படுத்தி, புதிய பல செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். பார்வையற்றோருக்கான உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதுடன், பல்வேறு கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளையும் செயற்படுத்த வேண்டும். மேலும், கலைத் துறையில் ஆர்வமுள்ள பார்வையற்றோரின் திறமைகளை வெளிக் கொணரும் வகையில் தனியான பயிற்சி வகுப்புகளை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

மேலும், பார்வையற்றோரின் பெற்றோர்கள் மற்றும் சமூக மட்டத்தில் இவ்விழிப்புலனற்றோர் பிரிவின் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கேற்ப, இப்பிரிவின் சேவைகளையும் மேம்படுத்துவது அவசியமாகும். மேலும், இப்பிரிவின் சேவைகளை ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் விஸ்தரித்து, அங்கு கல்வி பயிலும் மாணவர்களும் பயன்பெற வழிசமைக்கவேண்டும்.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் விழிப்புலனற்றோர் பிரிவு, பார்வையற்றோரின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவின் சேவைகள் மேம்படுத்தப்படுவதன் மூலம், பார்வை யற்றோர் சமூகத்தில் தன்னம்பிக்கையுடனும், சுயதேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வாழ்வதற் கும் வழிகாட்டும் எனலாம். இப்பிரிவு ஆரம்பித்தகாலம் தொடக்கம் பார்வையற்றோரின் கல்வி, மற்றும் தொழில் தொடர்பில் அவர்களின் திறமைகளை மேம்படுத்தி, சமூகமயமாக்கல் செயற்பாடுகளையும் முன் னெடுத்து வருகிறது. யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் இவ்விழிப்புலனற்றோர் பிரிவின் சேவைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு, எதிர்காலத்தில் மேலும் பல பார்வையற்றோரின் வாழ்க்கையை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படும் இச்செயற்றிட்டம் தொடர்பில் சில பரிந்துரைகள் முன் வைக்கப்படுகின்றன. இவ்விழிப்புலனற்றோர் பிரிவின் இடவசதியானது அதிகரிக்கப்படுவதுடன், பிரெயில் தட்டச்சு இயந்திரம், ஸ்கேனிங் இயந்திரம் போன்றவற்றின் உதவியுடன் தொழில்நுட்ப வசதிகளும் மேம்படுத்தப்படல் வேண்டும். கலையார்வம் கொண்டவர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடாத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். பெற்றோர்கள் மற்றும் சமூக மட்டத்தில் இவ் விழிப் புலனற்றோர் பிரிவின் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

**திறவுச்சொற்கள்:** விழிப்புலனற்றோர், யாழ்ப்பாண பொதுசன நூலகம், பார்வையற்றோர்-நூலக சேவைகள்